Reg. No. 1-M.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

I-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்.

SUPPLEMENT TO PART I OF THE FORT ST. GEORGE GAZETTE.

JULY 22, 1930.

ந. 29.] மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை, 1930-ம் வருஷம் ஜூலை மீ 22வ. [PRICE, 6 *pies*.

கவர்ன்மெண்ட் விளம்பரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு.

Tamil Translation of Notifications by Government.

லா டிபார்ட்மென்ட்

(ஜெனரல்).

விளம்பரம்.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1930-ம் வருஷம் ஜூன் மீ 27வ.

நெ. 530.—1923-ம் வருஷம் மார்ச் மீ 20வயுள்ள **போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்** I-ம் பாகத்தின் **327**-வது பக்கத்திலும் அதற்கு அடுத்த பக்கங்களிலும் (இங்கிலிஷில்) பிரசுரிக்கப்பட்டிருக்கும் லா (ஜெனரல்) டிபார்ட்மென்டில் பிறந்த 209-ம் நெ. விளம்பரத்தில் பிரசித்தம் செய்யப்பட்டுள்ள 1923-ம் வருஷத்திய சென்னபட்டணத்து மோடார் வண்டிகளைக் குறித்த விதிகளில், (1914-ம் வருஷத்து 8-வது ஆக்டாகிய) 1914-ம் வருஷத்திய இந்துதேசத்து மோடார் வண்டிகளாக்ட் 11-வது பிரிவின்படி, ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் செய்ய உத்தேசிக்கும் திருத்தங்களின் அடியிற்கண்ட மசோதாவானது - அதனால் வெகுசாய் பாதிக்கப்படக்கூடிய நபர்களுக்குத் தெரியும்பொருட்டு இதனால் பிரசித்தம் செய்யப்படுகிறது. மேலும், ஷை மசோதா 1930-ம் வருஷம் ஆகஸ்ட் மீ 1வயன்றைக்காவது அதற்குப் பிறகாவது ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், அந்த மசோதா விஷயமாய் மேலேகண்ட தேதிக்கு முன் எந்த நபரிடமிருந்தாகிலும் வந்துசேரக்கூடிய எவையேனும் அபிப்பிராயக்குறிப்புகள் அல்லது ஆட்சேபணைகளைப்பற்றி ஆலோசனை சபையிலுள்ள கவர்னரவர்கள் யோசிப்பார்களென்றும் இதனால் அறிக்கையிடப்படுகிறது:—

மசோதா திருத்தங்கள்.

I

ஷை விதிகளைச் சேர்ந்த 19-A விதியில்கண்ட இரண்டாவது வாக்கியத்துக்குப் பிறகு அடியிற்கண்ட வாக்கியங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்; அவையாவன:—

"சென்னை ராஜதானிப்பட்டணத்தில் அப்படிப்பட்ட ஒவ்வொரு நபரும் - பொலீஸ் ஸர்ஜனால் பரீட்சை செய்துபார்க்கப்பட்ட பிறகு இந்த விதிகளுடன் சேர்க்கப்பட்டிருக்கும் L நமூனாப்படி ஒரு (மெடிகல்) வைத்திய ஸெர்டிபிகேட்டையுங்கூட ஹாஜர்ப்படுத்த வேண்டும். வண்டி ஓட்டுவதற்கான லைஸென்ஸ் வைத்திருப்பவர் யாதொரு மோடார் வண்டியை ஓட்டுவதற்குத்தேக திடனுள்ளவராயில்லையென்று சந்தேகப்படுவதற்கு நியாயமிருப்பதாக பொலீஸ் கம்மிஷனர் அபிப்பிராயப்படுகிற பட்சத்திலே, வைத்தியரைக்கொண்டு மறுபடியும் பரீட்சை செய்து கொள்ளும்படி ஷை லைஸென்ஸ் வைத்திருப்பவருக்குக் கட்டளையிட அவருக்கு அதிகாரமுண்டு. மேலும், அவர் அந்த அபிப்பிராயத்தை எழுத்து மூலமாகப் பதியவேண்டும். மேலேகண்டபடி வைத்தியரைக்கொண்டு பரீட்சை செய்துகொள்வதற்காவது மறுபடியும் பரீட்சை செய்து கொள்வதற்காவது 2 ரூபாய் கட்டணம் செலுத்தத்தக்கதாகும்."

II

ஷை விதிகளைச்சேர்ந்த 30-D விதியில்கண்ட (1) குறிப்பிட்ட உபவிதியின் கடைசியில் அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது :—

"சென்னை ராஜதானிப் பட்டணத்திலே, ஷை எழுத்துமூலமான அதிகாரச் சீட்டு யாருக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த நபர் 18 வயதுக்குக்குறையாதவரென்று பொலீஸ் கம்மிஷனரானவர் சாட்சிய மூலமாகத்தெரிந்து திருப்தியடைந்தாலன்றி மற்றப்படி, அவர் அந்த எழுத்து மூலமான அதிகாரச்சீட்டில் மேற்கையெழுத்து போடக்கூடாது. வயதைக்குறித்து திருப்திகரமான சாட்சியம் எதுவும் ஹாஜர்ப்படுத்தப்படாவிட்டால் கம்மிஷரானவர் பொலீஸ் ஸர்ஜனிடமிருந்து வயதைக்குறித்த ஒரு ஸெர்டிபிகேட்டை ஹாஜர்ப்படுத்தும்படி ஷை நபரைக் கேட்கலாம். ஷை ஸெர்டிபிகேட்டுக்காக 1 ரூபாய் கட்டணம் விதித்து வாங்க பொலீஸ் ஸர்ஜனுக்குப் பாத்தியதை உண்டு."

III

K நமூனாவுக்குப் பிறகு அடியிற்கண்ட நமூனாவை அமைத்துக்கொள்ளவேண்டும்; அதாவது ;—

L நமூனா. (மெடிகல்) வைத்திய ஸெர்டிபிகேட்.

சென்னை ராஜதானிப் பட்டணத்தில் மோடார் வண்டியை ஓட்டுவதற்கான லைஸென்ஸ் பெறுவதற்கு வண்டி ஓட்டுவதே தொழிலாகவுடைய யாதொரு வண்டி ஓட்டுகிறவர் செய்துகொள்ளும் விண்ணப்பத்துக்காக.

1. அவர் 18 வயதுக்குக் குறைந்த வயதுள்ளவரா? ....

2. நீர் நன்றாய் நிதானிக்கக்கூடிய வரையில், விண்ணப்பதாரர் காக்கைவலியினாலாவது தலை சுழற்சியினாலாவது அவருடைய திறமையை வெகுசாய் பாதிக்கக்கூடிய யாதொரு மனோ வியாதியினாலாவது கஷ்டப்படுகிறாரா? ....

3. வண்டி ஓட்டுகிறவராக அவருக்குள்ள அலுவல்களைச் செய்யவொட்டாமல் தடுக்கக்கூடிய இருதய சம்பந்தமான அல்லது சுவாசப்பை சம்பந்தமான யாதொரு வியாதியினால் விண்ணப்பதாரர் கஷ்டபபடுகிறாரா? ....

4. (a) பார்வையில் குறை ஏதாகிலும் இருக்கிறதா? குறை ஏதாகிலும் இருந்தால், தகுந்த மூக்குக்கண்ணாடியால் அந்தக் குறை சரிப்படுத்தப்பட்டிருக்கிறதா? ....
   (b) மாலைக்கண் என்னும் வியாதியினால் விண்ணப்பதாரர் கஷ்டப்படுகிறாரா? ....
   (c) காதுகேட்பதில் குறை ஏதாகிலும் இருக்கிறதா? ....

5. வண்டி ஓட்டுகிறவராக அவருக்குள்ள அலுவல்களைத் திறமையாய்ச் செய்யவொட்டாமல் தடுக்கக்கூடிய அங்கவிகாரம் அல்லது அங்கப்பழுது ஏதேனும் விண்ணப்பதாரருக்கு இருக்கிறதா? ....

6. அவர் தம்முடைய அலுவல்களைச் செய்வதற்குப் போதுமான அளவுக்கு சுறுசுறுப்புள்ளவராக இருக்கிறாரா? ....

7. மதுசாரத்தையாவது புகையிலையையாவது லாகிரி வஸ்துக்களையாவது அவர் அபரிமிதமாக உபயோகிக்கும் வழக்கமுடையவரென்பதற்கு அவரிடம் ருஜு ஏதாகிலும் இருக்கிறதா? ....

8. (a) தேக ஆரோக்கியத்தையும் (b) குணத்தையும் கவனிக்கும் போது மோடார் வண்டி ஓட்டுகிறவருடைய அலுவல்களைச் செய்வதற்கு அவர் பொதுவாகத் தகுதி யுடையவரென்று நீர் அபிப்பிராயப்படுகிறீரா? ....

9. இன்னாரென்று அடையாளம் கண்டுபிடிப்பதற்கான குறிகள். ....

குறிப்பு.—தூரப்பார்வை விஷயமாகவும் கை, தலை, கைகளிலுள்ள பூட்டுகள் ஆகிய இவைகளின் நிலைமை விஷயமாகவும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

ஏ. எப். டபில்யு. டிக்ஸன்,
கவர்ன்மென்ட் டெப்யுடி ஸெக்ரெடரி.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS : PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.